From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C. No. 50 /2012

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Palaniyandi | Father/Husband Name | : Ayyappan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.11.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் பழையசுக்காம்பட்டியில் குடியிருந்து வருகிறேன், நான் எலக்ட்ரீசியனாக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 அம்பிகா என் தங்கைமுறையாவார். எதிரிகளை தெரியும். கடந்த 2004ம் வருடம் அம்பிகாவிற்கும் பெருமாளுக்கும் வண்ணாம்பாறைப்பட்டியில் வைத்து திருமணம் நடைபெற்றது. அப்போது திருமணத்திற்காக 9 பவுன் நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் சீதனமாக கொடுத்தார்கள். அம்பிகாவும் பெருமாளும் திருமணமாகி ஒரு வருடம்வரை சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள். அம்பிகா கொண்டு சென்று 9 பவுன் நகை மற்றும் சீர்வரிசை பொருட்களையும் பெருமாள், பந்தாயி,அவரது தங்கை ஆகியோர்கள் விற்றுவிட்டார்கள். பெருமாள் என்பவர் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொண்டு அம்பிகாவை அடித்து அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்.

பின்னர் அம்பிகா அவரது கணவரிடம் சென்று மற்றொரு பெண்ணுடன் தொடர்பு வைத்தது சம்மந்தமாக கேட்டபோது பெருமாள் நான் அப்படித்தான் தொடர்பு வைத்துக்கொள்வேன் என்று சொல்லி அடித்து விரட்டிவிட்டார். பெருமாள் மற்றொரு பெண்ணுடன் தொடர்ந்து தொடர்பு வைத்துக்கொண்டு அம்பிகாவிடம் பெருமாள் மறுபடியும் நகை, பணம் வாங்கி வரச்சொல்லி அடித்து அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார். அம்பிகாவிற்கும் பெருமாளுக்கும் 2 ஆண்குழந்தைகள் உள்ளது. அம்பிகா மறுபடிவும் பெருமாள் வீட்டிற்கு சென்று மற்றொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளது சம்மந்தமாக பேசி அந்த பெண்ணை விட்டுவிடவேண்டும் என்றும் நான் உங்களுடன் வாழ்கிறேன் என்று சொன்னார். அதற்கு பெருமாள் மறுத்துவிட்டார்.

எதாவது பிரச்சனை செய்தால் அம்பிகாவையும் அவரது குழந்தைகளையும் கொன்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டார். அத்தோடு அம்பிகா அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார். அம்பிகாவும் அவரது குழந்தைகளும் ஆதரவற்றவர்களாக நிற்கிறார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:**

எனது சொந்த ஊர் பழைய சுக்காம்பட்டி ஆகும். நான் 40 ஆண்டுகாலமாக பழைய சுக்காம்பட்டியில் வசித்து வருகிறேன். அம்பிகா எனக்கு உறவுக்கார பெண், எனக்கு தங்கைமுறை வேண்டும். அம்பிகாவிற்கு திருமணம் பேசி முடித்தபோது நான் உடனிருந்தேனா என்றால் நான் அப்போது வெளியூரில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். திருமணத்திற்கு எனக்கு அழைப்பிதழ் கொடுத்தார்கள் நான் கலந்துகொண்டேன். அம்பிகாவிற்கும், பெருமாளுக்கும் திருமணம் ஆட்டுக்குளத்திலுள்ள திருமண மண்டபத்தில் வைத்து நடந்தது என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் திருமணத்திற்கு செல்லவே இல்லை என்பதால்தான் எனக்கு ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அ.சா.1 அம்பிகாவின் ஊரான வண்ணாம்பாறைப்பட்டிக்கு அடிக்கடி செல்வேனா என்றால் எப்போதாவது செல்வேன். அம்பிகா எனது வீட்டிற்கு வருவாரா என்றால் வருவார்.

அம்பிகாவிற்கு 9 பவுன் நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் கொடுத்தது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நான் அம்பிகாவிடம் கேட்டு தெரிந்துகொண்டேன், நானும் திருமணத்திற்கு சென்றிருந்ததால் பார்த்தும் தெரிந்துகொண்டேன். அம்பிகாவின் கணவர் வீட்டில் நடந்ததாக சொல்லப்படும் இந்த வழக்கு சங்கதிகள் எனக்கு அம்பிகா சொல்லித்தான் தெரியும். 2004ம் ஆண்டு அம்பிகாவிற்கும் பெருமாளுக்கும் திருமணமாகி ஒரு வருடத்தில் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்று நான் கூறுவதால் அதன்பின்பு அவர்கள் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். ஆனால் அவ்வப்போது அம்பிகா பெருமாளிடம் சென்று சண்டையிட்டு வருவார். பெருமாள் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துகொண்டு அ.சா.1ஐ துண்புறுத்துவதாக சொல்வது பொய்யான சங்கதி என்றாலும், அ.சா.1தான் வேறொரு தொடர்பு வைத்துக்கொண்டு அவரே வீட்டைவிட்டு வெளியே சென்று இந்த பொய்யான புகாரை கொடுத்துள்ளர் என்றால் சரியல்ல.

அ.சா.1 அம்பிகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் புகார் கொடுத்ததாக அவர் சொன்னார். அதன்பேரில் போலீசார் நடவடிக்கை எடுத்தனரா என்றால் நடவடிக்கை எடுத்ததாக அம்பிகா சொன்னார். காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்ததாக சொல்லப்படும் சங்கதிகளும் அதன்பேரில் நடவடிக்கை எடுத்ததாக சொல்லப்படும் சங்கதிகளும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான்.

அம்பிகா எனத  தங்கைமுறை என்பதால் வழக்கு சம்பவங்கள் பற்றி எதுவும் தெரியாமல் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  இந்த வழக்கில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தனர்.

எப்பொழுது என்னை போலீசார் விசாரித்தனர் என்றால் பிரச்சனை நடக்கும்போது விசாரித்தனர். போலீசார் 2002, 2003 மற்றும் 2004 ஆண்டுகளில் என்னை விசாரித்தார்கள். சம்பவம் 2004-க்கு பின்னிட்டு நடந்ததாக சொல்வதால் அதற்கு முன்பே போலீசார் ன்னை விசாரித்ததாக நான் சொல்வது பொய்யான சங்கதி என்று சொன்னால் சரியல்ல.